DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, VELLORE DISTRICT

| | |
|---|---|
| Name: சின்னதாயி | கணவர் பெயர் -கோவிந்தன் |
| Village: ஜமான் கொல்லை | Taluk: வாணியம்பாடி |
| Caste: | Calling: |
| Religion: | Age: 62 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 12.03.2024

**O.S.No.06/2019** **வா.சா.1**

**3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

1. வா.சா.ஆ 6, 7 தான செட்டில்மெண்ட் ஆவணங்கள் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ. 6, 7 ஆவணங்கள் அசல் வழக்கு தாக்கல் செய்தபோது தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.6, 7 ஆவணங்களை அசல் வழக்கில் தீர்ப்பிற்காக நாளிடப்பட்ட பிறகு தாக்கல் செய்யப்பட்டுள்ளதற்கு ஏதாவது சிறப்பு காரணம் உள்ளதா என்றால் எங்களுக்கு தெரியாமல் பத்திரம் பதிவு செய்துவிட்டார்கள்.

2. நான் தற்போது சொல்லும் காரணத்தை எனது முதல் விசாரணையில் சொல்லி இருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். வழக்கு சொத்து 3–ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றாலும் அதனை அவர் அவரது பேரன்களான 4, 5 பிரதிவாதிகள் பெயரில் எழுதி வைத்துள்ளார் என்றாலும் அதில் எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல.வா.சா.ஆ.6, 7 ஆவணங்களின் படி வழக்கு சொத்தில் 4, 5 பிரதிவாதிகள் தான் சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

3. வா.சா.ஆ.6, 7 ஆவணங்களின் படி வழக்கு சொத்தில் 4, 5 பிரதிவாதிகள் தான் சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. மேற்படி விவரங்கள் எனக்கு நன்கு தெரியும் என்றாலும் இருந்த போதும் பிரதிவாதிகளுக்கு வீண் தொந்தரவு கொடுக்க வேண்டும் என்பதற்காக இந்த வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு 3 முதல் 5 பிரதிவாதிகளின் சிறப்பு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**( 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடிவுற்றது)**

**(1,2 பிரதிவாதிகள் தரப்பில் மேற்கண்ட குறுக்கு விசாரணையை தங்கள் தரப்பில் ஏற்பு செய்துகொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.)**